சுருக்கம்

பள்ளிக் கல்வி – 2017–18ஆம் கல்வியாண்டில் பள்ளிகளில்லா 20 குடியிருப்பு பகுதிகளில் புதிய தொடக்கப் பள்ளி துவங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வித் (அகஇ 2) துறை

அரசாணை (நிலை) எண். 99

நாள் 16.05.2018
திருவள்ளுவர் ஆண்டு 2049
விளம்பி வருடம்
வைகாசி 02

படிக்கப்பட்டது

தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித ந. க. எண்.011671/கே4/17, நாள் 21.07.2017 மற்றும் 16.04.2018.

*******

ஆணை :–

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில், 15.06.2017 அன்று நடைபெற்ற பள்ளிக் கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்களால் கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

> "தமிழ்நாட்டில் தொலைதூர கிராமப்பகுதிகள் மற்றும் மலைப்பகுதிகளில் மிக அவசியமாகக் கருதப்படும் மக்கள் தொகை அதிகமுள்ள இடங்களில் புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்க வேண்டும் என்ற கோரிக்கைகள் கனிவுடன் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 30 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்படும்."

2. 2017–2018ஆம் கல்வியாண்டில் பள்ளிகளில்லா 30 குடியிருப்பு பகுதிகளில் அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ள கீழ்க்கண்ட 20 குடியிருப்புகளில் புதிய தொடக்கப் பள்ளிகள் தற்போது துவங்க அனுமதி வழங்கலாம் எனவும், இவ்வாறு துவங்கப்படும் புதிய தொடக்கப் பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு ரூ.5200–20200 + 2800 தரஊதியம் (திருத்திய ஊதிய விகிதத்தில் Level – 10) என்ற ஊதிய விகிதத்தில் ஒரு இடைநிலை ஆசிரியர் பணியிடம் மற்றும் ரூ.9300–34800 +4500 தரஊதியம் (திருத்திய ஊதிய விகிதத்தில் Level–15) என்ற ஊதிய விகிதத்தில் ஒரு தலைமையாசிரியர் பணியிடம் வீதம் முறையே 20 இடைநிலை ஆசிரியர் மற்றும் 20 தலைமை ஆசிரியர் பணியிடங்களை நடைமுறையில் உள்ள விதிகளை பின்பற்றி பணிநிரவல் மூலம் நிரப்பிக் கொள்ள அனுமதி வழங்குமாறு பார்வையில் காணும் கடிதம் மூலம் தொடக்கக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை ஆய்வு செய்து, 2017-18ஆம் கல்வியாண்டில் பள்ளிகளில்லா 30 குடியிருப்பு பகுதிகளில் அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ள குடியிருப்புகளில் புதியதாக 20 தொடக்கப் பள்ளிகள் துவங்குதல் மற்றும் அப்பள்ளிகளுக்கான ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிப்பது குறித்து பின்வருமாறு அரசு ஆணை வெளியிடுகிறது :-

(i) பள்ளிகளில்லா 30 குடியிருப்பு பகுதிகளில் புதிய தொடக்கப் பள்ளிகள் துவங்குவதற்கான அனைத்து நிபந்தனைகளையும் நிறைவு செய்யும் 20 குடியிருப்பு பகுதிகளில் இணைப்பில் கண்டுள்ளவாறு 20 புதிய தொடக்கப் பள்ளிகள் துவங்க அனுமதி வழங்கப்படுகிறது.

(ii) இவ்வாறு துவங்கப்படும் 20 புதிய தொடக்கப் பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு ஒரு இடைநிலை ஆசிரியர் பணியிடம் வீதம் குறைந்தபட்ச ஊதியம் ரூ.20,600/- (நிலை-10 ரூ.20,600-65,500) 20 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை பணி நிரவல் மூலம் நியமனம் செய்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

(iii) புதியதாக துவங்கப்படும் 20 தொடக்கப் பள்ளிகளுக்கு, பள்ளி ஒன்றுக்கு ஒரு தலைமை ஆசிரியர் பணியிடம் வீதம் குறைந்தபட்ச ஊதியம் ரூ.36,200/- (நிலை-15, ரூ.36,200-1,14,800) 20 தலைமையாசிரியர் பணியிடங்களை பணி நிரவல் மூலம் நியமனம் செய்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3-இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர் பணியிடங்களுக்கான சம்பளம் குறித்த செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :-

"2202 பொதுக் கல்வி – 01 தொடக்கக் கல்வி – 101 அரசு தொடக்கப்பள்ளிகள் – மாநிலச்செலவினங்கள் – AC ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள் – 01 சம்பளங்கள்"

(து.தொ.கு 2202-01-101-AC-0101)

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புது துணைப்பணி" (NEW INSTRUMENT OF SERVICE) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்ற பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு செலவு பொது-I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்ற பேரவையில் ஒப்புதல் பெறும் வகையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாக கணக்கிட்டு எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெற தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி

விதிகள் 1963ல் உள்ள அட்டவணை A படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதி (வரவு செலவு பொது–I) துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2018–19ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (வரவு செலவு பொது–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் கோ.எண்.22236/நிதி(கல்வி–II)/2018 நாள் 10.05.2018 மற்றும் அ.சா.எண்.25326/நிதி(CMPC)/2018, நாள் 11.05.2018ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.223 (இருநூற்று இருபத்தி மூன்று)

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மாநில திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வி இயக்கம், சென்னை–6.
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
சம்மந்தப்பட்ட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
சம்மந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.

<u>நகல்:–</u>
சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை, சென்னை–9
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (கல்வி–II, வரவு–செலவு–I, II, மை.ம.ஆ.பி)த் துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வி (வரவு–செலவு) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

பிரிவு அலுவலர். 16/5/18
16/5/18

## இணைப்பு

அரசாணை(நிலை) எண்.99 பள்ளிக் கல்வி (அகஇ)த் துறை, நாள் 16.05.2018

| வ.எண் | 2017–18ஆம் கல்வியாண்டில் புதிய தொடக்கப் பள்ளிகள் துவங்கப்படும் குடியிருப்பின் பெயர் |
|---|---|
| 1. | உய்யகுடிப்பட்டி, அன்னவாசல் ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம். |
| 2. | முருங்கக்கொல்லை, கறம்பக்குடி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம். |
| 3. | பொத்தப்பள்ளம், குன்றாண்டவர் கோவில் ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம். |
| 4. | அன்பின் நகரம், சங்கரக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம். |
| 5. | எம்.ஜி.ஆர் நகர், திருத்தங்கல் நகராட்சி, விருதுநகர் மாவட்டம். |
| 6. | T.M.இந்திரா நகர் காலனி, ஸ்ரீவில்லிப்புத்தூர் ஒன்றியம், விருதுநகர் மாவட்டம். |
| 7. | வீட்டுவசதிப் பிரிவு, முதலிப்பாளையம் ஊராட்சி, திருப்பூர் மாவட்டம். |
| 8. | பெத்திக்குப்பம் காலனி, பெத்திக்குப்பம் ஊராட்சி, திருவள்ளூர் மாவட்டம். |
| 9. | மான்குட்டை கிராமம், புதுப்பாளையம் ஒன்றியம், திருவண்ணாமலை மாவட்டம். |
| 10. | கீழ்செண்பகத் தோப்பு, ஜவ்வாதுமலை ஒன்றியம், திருவண்ணாமலை மாவட்டம். |
| 11. | வண்ணாங்குட்டை, ஜவ்வாதுமலை ஒன்றியம், திருவண்ணாமலை மாவட்டம். |
| 12. | மாந்தோப்பு, புளியம்பட்டி ஊராட்சி, திருவண்ணாமலை மாவட்டம். |
| 13. | பெருங்காடு, கூக்கால் ஊராட்சி, திண்டுக்கல் மாவட்டம். |
| 14. | விரதன்கெட்டு, பெத்தனப்பள்ளி பஞ்சாயத்து, கிருஷ்ணகிரி மாவட்டம். |
| 15. | பாஞ்சாலியூர், பெத்ததாளாப்பள்ளி பஞ்சாயத்து, கிருஷ்ணகிரி மாவட்டம். |
| 16. | வலசை, அலங்காநல்லூர் ஊராட்சி, மதுரை மாவட்டம். |
| 17. | வண்டல், வேதாரண்யம் வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம். |
| 18. | தரைக்காடு, பேர்ணாம்பட்டு நகராட்சி, வேலூர் மாவட்டம். |
| 19. | நரிக்குறவர் காலனி (அண்ணா நகர்), திமிரி ஒன்றியம், வேலூர் மாவட்டம். |
| 20. | IOB காலனி, தொண்டாமுத்தூர் ஊராட்சி, கோயம்புத்தூர் மாவட்டம். |

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர். 16/5/18

16/5/18